ORIGINAL ARTICLE

# பூத்தான் நாட்டின் அரசியலில் வினைத்தூய்மை மற்றும் வினைத்திட்பக் கொள்கைகளும் மகாபாரதக் கதைகளின் தொடர்பியலும்

[BHUTAN NADDIN ARASIYALIL VINAITTUUIMAI MADRUM VINAITTHIDPAK KOLKAIKALUM MAGABARATAK KATAIKALIN THODAIPIYALUM]

# APPLICATION OF 'VINAITHUIMAI' AND VINAITHITPAM' THEORY IN BHUTAN'S POLITICAL VIRTUES AND ITS RELEVANCE WITH MAHABARATHA EPIC STORIES

**வெங்கடேஸ் ராவ் சூரிநாராயணன் [1] / Venkades Rao Surinarayanan [1]**

[1] மலேசியக் கல்வி அமைச்சு, புத்ராஜாயா, மலேசியா. / Malaysian Ministry of Education, Putrajaya, Malaysia.
Email : venkadesrao90@gmail.com

DOI: https://doi.org/10.33306/mjssh/21

**ஆய்வுச் சாரம்**

இவ்வாய்வில் திருக்குறளின் வினைத்தூய்மை மற்றும் வினைத்திட்பக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இராஜகோபாலாச்சாரி எழுதிய 31 மகாபாரதக் கிளைக் கதைகள் ஆராயப்பட்டுள்ளன. இவ்வாய்வில் பூத்தான் நாட்டு அரசியல் சூழல்களை வினைத்தூய்மை மற்றும் வினைத்திட்பக் கோட்பாடுகளைக் கொண்டு ஆராயப்பட்டுத் தரவுகள் பகுக்கப்பட்டுள்ளன. பூத்தான் நாட்டு அரசியல் அமலாக்கங்களையும் மகாபாரதக் கதைகளையும் வினைத்தூய்மை மற்றும் வினைத்திட்பக் கோட்பாடுகளின் கூறுகளின் வாயிலாக ஒப்பிடப்பட்டுத் தரவுகள் கலந்துரையாடப்பட்டுள்ளன. இவ்வாய்வு வாயிலாக வினைத்தூய்மை மற்றும் வினைத்திட்பக் கோட்பாடுகளைக் கொண்டு ஒரு நாட்டின் நடப்பு அரசியல் அமலாக்கங்களையும் கொள்கைகளையும் ஆராய முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**கருச்சொற்கள்:** மகாபாரதம், வினைத்தூய்மை, வினைத்திட்பம், திருக்குறள், பூத்தான், அரசியல்

**Abstract**

This research is aimed to study the influences of 'Vinaithuimai' and 'Vinaithitpam' theories in 31 Mahabharata epic stories written by Chakravarty Rajagopalacari. The research shows 'Vinaithuimai' and 'Vinaithitpam' theories can be applied to study Bhutan's political policies and practices as well as to study and discuss Mahabharatha epic stories in the context of political practices. Hence, this research finds that the 'Vinaithuimai' and 'Vinaithitpam' theories can be used to study a country's current political virtues and its conduct.

**Keywords:** Mahabhara, Vinaithuimai, Vinaithitpam, Thirukural, Bhutan, Politic

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 28th March 2019, revised 30th April 2019, accepted 8th May 2019

**முன்னுரை**

மகாபாரதம் இந்திய நாட்டின் ஒப்பற்ற இதிகாசமாக மட்டும் பொருள்படாமல் ஒட்டுமொத்த இந்திய நாட்டின் மிகப் பெரிய தத்துவக் காவியமாகவும் விளங்குகின்றது. வியாசர் எழுதிய இவ்விதிகாசம் பாண்டு புத்திரர்களான தர்மர், அர்ஜுணன், பீமன், நகுலன் மற்றும் சகாதேவன் ஆகிய ஐவர்களுக்கும் (பஞ்சபாண்டவர்களுக்கும்) திருதராஷ்திர புதல்வர்களான துரியோதனன் மற்றும் துச்சாதனனுக்கும் (கௌரவர்களுக்கும்) ஏற்படுகின்ற உரிமைப் போராட்டத்தை விளக்குகின்றது என வேங்கடாசாரி (2003)[1] பகர்கின்றார். தர்ம நெறிகளைப் பின்பற்றும் போது ஏற்படும் விளைவுகளையும் ஒருவன் தான் செயல்களில் வெளிப்படுத்த வேண்டிய வினைத்தூய்மைகளையும் வினைத்திட்பங்களையும் இவ்விதிகாசம் விளக்குகின்றது. இறுதியில் செயல் தூய்மையில்லா அரசியல் சித்தாந்தங்களும் அதர்ம வழியில் முன்னேறும் வாழ்வியல் செயல்பாடுகளையும் அழிவையே ஏற்படுத்தும் என்று உலகுக்கு எடுத்தியம்பும் இலக்கியமாகவும் மகாபாரதம் விளங்குகின்றது என்று சிங்காரவேலு (2013)[2] பகர்கின்றார்.

'விண்ணமுதை யொத்த வியாசர் விருந்தளித்த
புண்ணியனே வேதாந்தப் போதகனே! தண்ணிய நீள்
ஆழிசூழ் இவ்வுலகில் ஆழியான் இன்னருளால்
வாழிநீ ஐயா! மகிழ்ந்து',

(சக்ரவர்த்தி இராஜகோபாலச்சாரி, 2014)[3]

என்ற வரிகளில் மகாபாரதம் ஒரு ஞானக் களஞ்சியம் என்றும் அது மக்களின் நல்லொழுக்கத்திற்கும் சீரிய வாழ்விற்கும் சிறந்த வழிக்காட்டியாகவும் அமைகின்றது என்று சக்ரவர்த்தி இராஜகோபாலச்சாரி (2014)[3] பகர்கின்றார். இவ்வாய்வில் ஆய்வாளர் மகாபாரதக்

கதைகளின் ஊடே காணப்படும் வினைத்தூய்மையையும் வினைத்திட்பத்தையும் ஆராய்ந்துள்ளார். வினைத்தூய்மை எனப்படுவது செய்கின்ற செயலில் தூய்மை எனப் பொருள்படும். திருக்குறளில் பொருட்பாலில் அமையப்பெற்றுள்ள ஓர் அதிகாரமாகவும் வினைத்தூய்மை விளங்குகின்றது. இவ்வதிகாரம் சொல்லும் வினை என்பது அரசாட்சியில் நிகழ்கின்ற செயலைக் குறிப்பது. நாட்டிற்காகச் செய்யப்படும் செயல்களுக்கு அதன் ஆட்சியாளரே பொறுப்பு. ஆட்சியாளர் வினைகள் ஆற்றும்போது தூய்மையைக் கடைப்பிடித்தல் இன்றியமையாதது என வலியுறுத்தப்பட்டுள்ளது. வினைத்திட்பம் என்றால் வினை முடித்தற்கான செயலுறுதி என்று பேசப்படுகிறது. மனத் திட்பம்தான் வினைத்திட்பம் எனப் பொருள்படுகின்றது. அதாவது வினையின் திட்பம் வினையைச் செய்பவரின் உள்ளத்தைப் பொறுத்தது. வினைத்திட்பம் இருந்தால் எண்ணியப் பொருளை எண்ணியபடி செய்ய இயலும். இவ்விடயம் ஆட்சியாளர் ஒருவர் தன் நாட்டு அரசியல் அமலாக்கங்களில் காட்ட வேண்டிய செயல் உறுதிகளையும் சுட்டுகின்றது. அவ்வகையில் இவ்வாய்வில் பூத்தான் நாட்டின் அரசியல் சூழல்களை மகாபாரதக் கதைகள் மற்றும் திருக்குறள் கோட்பாடுகளான வினைத்தூய்மை மற்றும் வினைத்திட்பக் கோட்பாடுகளைக் கொண்டு ஒப்பிடப்பட்டுத் தரவுகள் குறிக்கப்பட்டுள்ளன. சுருங்கக்கூறின் இந்த ஆய்வு மகாபாரதத்தையும் திருக்குறள்களையும் புதிய நோக்கில் ஆராய்வதாக அமைவதோடு ஒரு நாட்டின் அரசாங்கம் தனது அரசியல் அமலாக்கங்களில் கடைப்பிடிக்க வேண்டிய வினைத்தூய்மை மற்றும் வினைத்திட்ப கூறுகளையும் நன்கு உணர்த்தும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

பூத்தான் நாட்டின் அரசியலில் காணப்படும் வினைத்தூய்மை மற்றும் வினைத்திட்பக் கொள்கைகளும் மகாபாரதக் கதைகளுக்கும் உள்ள தொடர்பியலையும் ஆராய்தல்.

**பூத்தான் நாட்டின் அரசியலில் வினைத்தூய்மை மற்றும் வினைத்திட்பக் கொள்கைகளும் மகாபாரதக் கதைகளின் தொடர்பியலும்**

வினைத்தூய்மைக் கோட்பாட்டில் பழிக்கு அஞ்சுதல் எனும் கூறு மிக முக்கியக் கூறாக அமைகின்றது. அதுமட்டுமின்றி, நாம் செய்கின்ற செயல்கள் யாருக்கும் அதோடு எதற்கும் எவ்விதப் பாதகங்களையும் அளிக்காத வண்ணம் நம் செயல் மிக தூய்மை நிலையில் இருக்க வேண்டும் என இக்கூற்றுப் பறைச்சாற்றுகின்றது. எந்தவொரு செயல்களைச் செய்யும் முன்னர் அஃது எப்படிப்பட்டச் சூழலை ஏற்படுத்தும் என்பதோடும் மேலும் அச்செயலானது எதிர்காலத்தில் எவ்வகையான விளைவுகளையும் பாதிப்புகளையும் உருவாக்கும் என்பதனைப் பறைச்சாற்ற துணைநிற்கும் குறளே,

> பழமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
> கழிநல் குரவே தலை (657)

இக்குறள் ஊர் பழியையும் பிறர் பழியை ஏற்றும் மக்களின் தூற்றலையும் ஏற்றும் அடைகின்ற செல்வத்தைக் காட்டிலும் யாருக்கும் எதற்கும் தீங்கிழைக்காமல் இருந்து அடையக்கூடும் வறுமை நிலையை ஏற்பது மிகச் சிறப்பானது என எடுத்தியம்புகின்றது. மகாபாரதத்தில் பழிக்கு அஞ்சி பாண்டவர்கள் தாங்கள் செய்யும் செயலில் மிகவும் நேர்மையாகவும் யாருக்கும் எந்தவொரு விளைவையும் ஏற்படுத்தாமல் வாழ்ந்தனர். யார் செல்வத்திற்கும் ஆசைப்படாமல், செல்வம் திரட்டும் பொருட்டுப் பழிச் சொல்லுக்கு ஆளாகும் நிலையிலிருந்து தங்களைத் தற்காத்தனர். மாறாக, அவ்வாறு செய்யாதக் காரணத்தால் கௌரவர்கள் போரில் வீழ்ந்ததோடு அவர்களின் சந்ததியினர் காலத்திற்கும் பழிச் சொல்லுக்கு ஆளாகி சீர்குலைந்துள்ளனர். பழிக்கு அஞ்சி செய்கின்ற செயல்களில் காட்டுகின்ற வினைத்தூய்மையானது, இறுதியில் நீடித்த நன்மையையே அளிக்கும் என்று மகாபாரதம் பொதுவாகவே உலகுக்கு மிக ஆழமான சிந்தனையுடன் விளக்குகின்றது.

இன்றையச் சூழலில் பொருள் தேடும் அடிப்படையில் வாழும் மனிதர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். தனிநபரின் பெருமையையும் ஓர் இனத்தின் சிறப்பையும் ஏன் ஒரு தேசத்தின் மாண்பையையும் நிர்ணயிப்பது அவர்கள் கொண்டிருக்கின்ற பொருள் திரட்டே. பணம் அளவிடப்படுகின்ற வேளையில் தவறான செயல்களினால் திரட்டப்பட்ட செல்வத்தினால் ஏற்படும் பழிகளும் விளைவுகளும் ஓரங்கட்டப்படுகின்றன. ஒவ்வொரு நாட்டின் அரசும் தங்களின் பொருளாதாரத்தைப் பெருக்கும் பொருட்டும் உலக நாடுகளின் வரிசையில் முன்னேற்றமிக்க நாடு எனப் பெருமிதமடைய வேண்டும் எனும் நோக்கிலும் நிகழ்காலத்தில் அவர்கள் செய்கின்ற செயல்கள் எதிர்காலத்தில் எத்தகைய விளைவுகளையும் தூற்றுதல்களை ஏற்படுத்தக்கூடும் எனக் கொஞ்சம்கூட கருத்தில் கொள்ளாது மிக தூய்மையற்ற நிலையில் செயல்படுகின்றன எனலாம். எதிர்கால நிந்தைகளுக்கும் வரப்போகும் சந்ததியினரின் பழிக்கும் அஞ்சாமல் ஒவ்வொரு நாட்டின் செயல்பாடு அமைகின்றது.

அவ்வாறாக நாட்டின் வளர்ச்சி என்ற பாதையில் ஒவ்வொரு நாடும் பொக்கிஷமாய்ப் பேணிக்காக்க வேண்டிய இயற்கையைப் பொருளாதார வளர்ச்சிக்கு இரையாக்கும் வகையில் மிகவும் தூய்மையற்றச் செயல்களில் உலகின் ஒவ்வொரு அரசாங்கமும் முனைப்புக் காட்டுகின்றன. ‘Gross domestic product’ அதாவது, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அளவுக்கோள் அடிப்படையில் ஒவ்வொரு நாடும் தங்களின் பொருளாதாரத் திட்டங்களைத் திட்டமிடுகின்றன. அப்படிப் பொருளாதாரத்தை மேன்மைப்படுத்தும் நோகில் ஒவ்வொரு நாடும் அது கொண்டுள்ள இயற்கை வளங்களையே அடமானம் வைக்கின்றன. கனிம வளங்கள், வனங்கள், விலங்குகள், இயற்கை எரிப்பொருள் ஆகியவைப் பொருளாதார வளர்ச்சிக்கு எல்லை மீறிய அளவில் அழிக்கப்படுகின்றன என்று கார்ல் கோரன் மேலர் (Karl Goral Maler) (2000)[4] குறிப்பிடுகின்றார். எதிர்காலச் சந்ததியினரின் பழிக்கு அஞ்சாமல் இயற்கையின் நீடுநிலவலையும் கருத்தில் கொள்ளாமல் அநேகமான உலக நாடுகள் செயல்பட்டதன் விளைவுதான் உலக வெப்பமயமாதல் எனும் மனுகுலம் அழிவதற்கான பறையோசை. தனிமனிதன் தொடங்கி ஒரு தேசமே பழிச்சொல்லுக்கு அஞ்சாது வினைத்தூய்மையைக் கடைப்பிடிக்காததன் விளைவு இது. ஆனால், இந்த நாடுகளுக்கெல்லாம் மாறாகப் பூத்தான்

நாடு இருக்கின்றது என சபினா அல்கிரே (Sabina Alkire) (2012)[5] பகர்கின்றார். மக்கள் தொகையாலும் எல்லை விரிப்பாலும் உலகப் பெருநாடுகளாக விளங்குபவைச் சீனாவும் இந்தியாவும். அப்படி இந்த இரண்டு நாட்டு எல்லைகளான இமய மலை அடிவாரத்தில் வெறும் 38,394 கி.மீ பரப்பளவைக் கொண்ட நாடாகவும் உலகின் மிகச் சிறிய முன்னேற்ற நாடாகவும் பூத்தான் கருதப்படுகின்றது.

இந்நாட்டின் மக்கள் தொகை 742,737 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. உலகின் மற்ற நாடுகளெல்லாம் பொருளாதார வளர்ச்சிக்குத் தங்கள் நாட்டின் வளங்களை இரையாக்கும் வேளையில் பூத்தான் நாடு மட்டும் 'Gross National Happiness' எனும் கொள்கையில் நாட்டு மக்களின் மகிழ்ச்சி அடைவுநிலையை மையமாகக் கொண்டு தங்களின் நாட்டின் முன்னேற்றத்தை அளவிடுகின்றது (Karma Ura, Sabira Alkire, Tshoki Zangmo & Karma Wangdi, 2012)[6]. இந்நாட்டின் அரசரும் சரி மக்களும் சரி தங்கள் செயல்களில் அதீத வினைத்தூய்மையைக் காட்டி உலகுக்கு மிகச் சிறந்த சான்றாக அமைகின்றனர். 'Carbon Neutral' அதாவது கரியமிலவாயு சமன்நிலைக்குப் போராடும் பேராற்றல் மிக்க நாடாகவே பூத்தான் திகழ்கின்றது. Sabina Alkire (2012)[5] பசுமைப் புரட்சியின் வாயிலாகப் பூத்தான் தனது நாட்டின் வளமிக்க வனங்களை இன்றளவும் 70% கட்டிக் காப்பாற்றுகின்றது எனக் குறிப்பிடுகின்றார்.

மேலும், பூத்தான் நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் வனநிலை நீடுநிலவலை உறுதிப்படுத்துகின்றது. கட்டுப்படுத்தாதக் கரியமிலவாயுவின் வெளியேற்றத்தால் உலகின் வெப்பநிலை இரண்டு பாகை செல்சியலாக அதிகரித்துள்ளது என்பதும் இவரின் ஆய்வின் முடிவுகளாக அமைகின்றது. ஆனால், பூத்தான் நாட்டின் ஒரு வருட கரியமிலவாயிவின் வெளியேற்றமான இரண்டு பில்லியல் டன் கரியமிலவாயுவை இயற்கைக்குப் பாதிப்பு அளிக்காமல் இருக்க அதை முறையாகச் சமன் செய்ய பூத்தான் அரசாங்கமும் அதன் மக்களும் பெருமளவில் வேட்கைக் கொண்டுள்ளனர் என்று Karma Ura, Sabira Alkire, Tshoki Zangmo & Karma Wangdi (2012)[6] கூறுகின்றார்.

> The GNH Index is meant to orient the people and the nation towards happiness, primarily by improving the conditions of not-yet-happy people. In the way the GNH Index constructed, there is a greater incentive for the government and others to decrease the insufficiencies of not-yet-happy people. The GNH Index provides an overview of performance across 9 domains of GNH phychological wellbeing, time use, community vitality, cultural diversity, ecological resilience, living standards, health, education and good governance.
>
> (A Short Guide to Gross National Happiness Index, 2012)

உலக வெப்பமயத்தினால் தங்கள் நாட்டின் பனிச்சறுக்குகள் நாட்டைப் பாதிக்கும் என அஞ்சி பூத்தான் மக்களின் செயல்களில் வினைத்தூய்மைக் கொள்கைகள்

கையாளபப்டுகின்றன. இச்சூழலில் முதலில் அவர்கள் மாற்ற வேண்டியது தாங்கள் செய்கின்ற செயல்களே எனப் புரிந்ததோடு நின்றுவிடாமல் ஒவ்வொரு செயலிலும் முதல் தர தூய்மைக் கொள்கைகளைத் தங்களின் தினசரி வேலைப்பாடுகளில் அமல்படுத்துகின்றனர். Karma Ura, Sabira Alkire, Tshoki Zangmo & Karma Wangdi (2012)[6] காகிதமற்ற அரசாங்க நிர்வாகம், மின் வாகனம், நீர்வழிச் சக்தி, மறுநடவு ஆகிய செயல் தூய்மைகளின் வாயிலாகத் தங்களின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் கேடையங்களாகப் பூத்தான் மக்கள் கொண்டுள்ளனர் என விவரிக்கின்றார். அதன் விளைவாக இரண்டு டன் பூத்தான் மக்களின் கரியமிலவாயு கழிவுச் சமன் செய்யப்படுவது மட்டுமின்றி இன்னும் மூன்று மடங்கு இதர உலக மக்களின் கரியமிலவாயு கழிவையும் சேர்த்துப் பூத்தான் மக்கள் சமன் செய்கின்றனர் என்றும் இவர் குறிப்பிடுகின்றார். வினைத்தூய்மைக் கோட்பாட்டில் உரைக்கும் பழிக்கு அஞ்சுதல் எனும் கூற்றுக்கு ஒப்ப பூத்தான் நாட்டின் ஒவ்வொரு மக்களும் மிகச் சிறந்த வினைத்தூய்மைக் கொள்கைகளைக் கொண்டிருந்ததால் மட்டுமே இது சாத்தியமான ஒன்றாக அமைந்தது என்று கூறலாம்.

பெருமளவு உலக மக்களும் அரசு இயக்கங்களும் இயற்கையின் உன்னதம் அறியாமல் இயற்கையை மாசுப்படுத்தும் காரியங்களில் ஈடுபடும் போது பூத்தான் மக்களின் வினைத்தூய்மையும் அதன் அரசாங்க கொள்கைகளும் போற்றுதற்குரிய ஒன்று. எதிர்கால விளைவுகளுக்கும் வருங்காலச் சந்ததியினரின் தூற்றுதலுக்கும் அஞ்சி பூத்தான் அரசாங்கமும் அதன் மக்களும் மற்றும் அதன் அரசாங்க நிர்வாகமும் மிகத் தூய்மையான முறையில் செயலாற்றுகின்றது. மேலும், இயற்கையின்பால் ஒவ்வொரு உலகக் குடிமகன் கொண்டு இயங்க வேண்டிய மிகச் சிறந்த வினைத்தூய்மை செயல்பாடுகளை உலகுக்குப் பூத்தான் மக்கள் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

செயல் தூய்மையால் மகாபாரதத்தில் எப்படிச் செய்கின்ற செயல்களில் தூய்மையைக் கடைப்பிடித்து வெற்றியைக் கண்டனரோ அதேபோல் இன்று பூத்தான் மக்களும் அதன் அரசாங்கமும் தங்கள் செயல்களில் வினைத்தூய்மையைப் பின்பற்றுவது பெரும் போற்றுதற்குரியது. மகாபாரதத்தில் இயற்கையைப் போற்றும் சம்பவங்கள் பெரிதும் காணப்படுகின்றன. அதேப் போன்று இயற்கையின் நீடுநிலவலின் அவசியத்தை உணர்த்தும் பூத்தான் நாட்டு மக்களும் அதன் ஆட்சியாளர்களும் கைக்கோர்த்து நன்மையை நாடுகின்றனர். மற்ற நாடுகளைப் போன்று செயலில் தூய்மை நிலையைத் துறந்து செல்வம் திரட்டும் நோக்கில் செயல்படாததால் பூத்தான் மக்களின் ஆரோக்கிய நிலையும் ஆயுட்காலமும் உலகில் சிறந்த ஒன்றாகத் திகழ்கின்றது. ஆக, செய்கின்ற ஒவ்வொரு செயல்களில் வினைத்தூய்மையைக் கடைப்பிடித்தால் மாசுப்பட்ட இயற்கையை இனி மீட்டெடுக்கலாம் என்பதனைப் பூத்தான் எனும் சிறிய தேசம் ஒவ்வொரு மனுகுலத்திற்கும் இடித்துரைக்கின்றது. மேலும், இயற்கையை அழித்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது,

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துணீர் பெய்திரீ இ யற்று (660)

என்ற குறளுக்கு ஒப்பானது எனலாம். மேலும், வருங்கால சந்ததியினருக்கு மாசற்ற இயற்கையை அளிக்கும் நிலையால் அவர்களின் பழிக்கும் ஆளாக வேண்டிய நிலையில் இருந்தும் தப்ப முடிகின்றது.

**முடிவுரை**

மகாபாரதமும் திருக்குறளும் இந்திய இலக்கியங்களாக மட்டுகின்றி தத்துவ இதிகாசங்களாகவும் அமைகின்றது. மேலை நாட்டு இலக்கியங்களுக்கு மேலாகவும் இவை நின்று விளங்குபவை. இவ்விரண்டு காவியங்களும் காலத்தைக் கடந்து அப்பாற்பட்டவையாக விளங்குகின்றது (மோகனராசு, 2012)[7]. எனவே, இவ்விரு காவியங்களை ஆய்வாளர்கள் காலச் சூழல்களுக்கு ஏற்றவாறு ஆராய முற்படலாம். இவ்விரு இலக்கியங்களும் வாழ்வியலின் செழுமையை மேலும் வளர்க்கவல்லது என்பது திண்ணம். அண்ணாமலை (1999)[8] நாடும், சமுதாயமும் நன்கு செயல்படவும் நலம் பெறவும் வள்ளுவரின் குறட்பாக்கள் பெரிதும் துணைநிற்கின்றன எனக் குறிப்பிடுகின்றார்.

மேலும், இலக்கியங்களை வாசிப்பதால் மனம் மற்றும் சிந்தனைச் சீர்படும் என்பதனை மாணவர்கள் அறிவர். வாழ்நாள் கற்றலுக்கு மாணவர்கள் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளவும் ஆயுத்தமாவர். வாசிப்பு வெறும் வாசிப்பாக அமையாமல் அவர்களின் மனமகிழ்வாகவும் வாழ்க்கைத் தேடல்களுக்கான சாவியாக அமையும் என்ற சிந்தை அவர்களின் மனதில் வளர இவ்வாய்வுத் துணைப்புரியவல்லது. தனிநபரின் ஆள்வினை அறிவை அதாவது வினைத்தூய்மையிலும் வினைத்திட்பத்திலும் தங்களின் ஆளுமையை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பையும் இவ்வாய்வு வழங்கவல்லது. தொடர்ந்து, இவ்வாய்வானது சமுதாயத்திற்கு அவர்கள் செய்கின்ற செயல்களில் காட்ட வேண்டிய வினைத்தூய்மை மற்றும் வினைத்திட்பத்தைப் பற்றியும் எடுத்துரைக்கவல்லது. மேலும், ஆள்வினை மற்றும் உளத்தூய்மை சிந்தனையை மீண்டும் மனிதர்களிடையே கொண்டு செல்லவும் உதவும். தங்கள் செயல்களில் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளவும் இவ்வாய்வு வழிகோலும். எதைச் செய்தாலும் எந்த நடவடிக்கைகளில் ஈடுப்பட்டாலும் அதன் எதிர்விளைவுகளைப் பற்றி சிந்திக்கத் தொடங்குகின்ற இயல்பினைப் பெறவும் இவ்வாய்வு உதவும். மிக முக்கியமாகச் சமுதாயத்தில் நீண்டநாள் புதையுண்டு கிடக்கும் வினைத்தூய்மையிலும் வினைத்திட்பத்திலும் காட்ட வேண்டிய உன்னதமான ஆள்வினைச் சிந்தனைகளும் வலுப்பெறும்.

மேலும், அரசியல் அமலாக்கங்களில் பூத்தான் நாட்டைப் போன்று அமல்படுத்தப்பட்டால் உலகம் செழிக்கும். உலக அரசியலில் ஏற்படக் கூடிய சம்பவங்களையும் இடர்களையும் முறையான முறையில் கையாள உதவிட இயலும். ஒரு நாட்டின் அரசியல் சீர்ப்பெறுவதோடு சமுதாயம் சீரமையும். சண்டைகள், அவலங்கள், சீர்கேடுகள் அனைத்தும் நீங்கி உலகம் மீண்டும் மனிதம் எனும் சக்கரத்தில் ஓடும். இல்லையேல், தொழில்நுட்பம் எனும் போர்வையில் சுயநலம் பேராற்றல் பெற்று இவ்வுலகை நாசப்படுத்திவிடும்.

மொத்தத்தில், அன்பு, அறநெறி மற்றும் மகிழ்ச்சி நிலையாக அமைய செயல்களில் காட்டவேண்டிய வினைத்தூய்மை மற்றும் வனித்திட்பம் எனும் ஆள்வினைச் சிந்தனை மிக மிக அவசியமானது. ஒரு பூரணமான மனிதனாக வாழ வழிகாட்டும் திறவுக்கோள் ஆழ்ந்த ஆள்வினைச் சிந்தனை என்ற உண்மை இவ்வாய்வைப் படிக்கும் நபர்களுக்குப் புரியவல்லது.

**துணைநூற்பட்டியல்:**


1. Vengataccari, A, G. (2003). *Literature in India these Days (இன்றைய இந்திய இலக்கியம்).* Chennai: Jyoti Enterprise.
2. Singaravelu. (2013). *Internal literature (அக இலக்கியம்).* Chennai: Shroff Publishers.
3. Sakkaravarti Rajagopalachari. (2014). *Mahabharatham (மகாபாரதம்).* Chennai: Vanathi Publications.
4. Karl Goran Maler. (2000). *Development, ecological resources and their management: A Study of Complex Dynamic System.* European Economic Review.
5. Sabina Alkire. (2012). *The economy of gross national happiness: Towards a new economic model*. UN Project Syndicate.
6. Karma Ura, Sabina Alkire, Tshoki Zangmo & Karma Wangdi. (2012). *A short guide to gross national happiness index*. The centre of Bhutan Studies.
7. Mokanarasu, K. (2012). *Research and actual text of Thirukurral (திருக்குறள் ஆய்வு மெய்யுரைகள்).* Chennai: Manickavasagar Publications.
8. Annamalai, S. (1999). *Thoughts of Thirukurral – Porutpaal (திருக்குறள் சிந்தனை - பொருட்பால்).* Chennai: Vanathi Publications.



**Citation in Tamil**
வெங்கடேஸ் ராவ் சூரிநாராயணன். (2019). பூத்தான் நாட்டின் அரசியலில் வினைத்தூய்மை மற்றும் வினைத்திட்பக் கொள்கைகளும் மகாபாரதக் கதைகளின் தொடர்பியலும். *முவாலிம் சமூக அறிவியல் மற்றும் மனிதவியல் ஆய்விதல், 3*(3), 275-282. https://doi.org/10.33306/mjssh/21

**Citation in Tamil @ Romanised**
Venkades Rao Surinarayanan. (2019). Bhutan naddin arasiyalil vinaittuuimai madrum vinaitthidpak kolkaikalum Magabaratak kataikalin thodaipiyalum. *Muallim Journal of Social Science and Humanities*, *3*(3), 275-282. https://doi.org/10.33306/mjssh/21

**Citation**
Venkades Rao Surinarayanan. (2019). Application of ‘vinaithuimai’ and vinaithitpam’ concept in Bhutan’s political virtues and its relevance with Mahabaratha epic stories. *Muallim Journal of Social Science and Humanities*, *3*(3), 275-282. https://doi.org/10.33306/mjssh/21